முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1440

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.09.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
ஞானிகள் துணைகொண்ட தேசிகா வாழ்க
தானதர்மத்தின் மகா சக்தியே
தவதர்ம ஆற்றல்கூட்டி உலகமெங்கும்
2. உலகமெங்கும் அற்புதம் நடத்துகின்ற உயர்ஞானியே
உலகம் பாதுகாப்புற அருளும் தவசியே
வேலவன் யான் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
விரும்பி அரங்கன் நீ கேட்க இனிதே
3. இனிதே சோபகிருது வேங்கைத் திங்கள்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 22 ம் நாள், 08.09.2023, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அரங்கனுக்கு ஆற்றல் கூட
கனிவேலவன் என் சூட்சுமமாகவே
கலியுகத்தில் அவதாரம் நீ நிகழ்த்தி இருக்க
4. இருக்கவே இந்த அவதாரத்தில்
எல்லா நோக்கமும் பூர்த்தியாகும்
கருத்தாக உன் பிறவித்தொடர்புள்ள தொண்டர்படைகளெல்லாம்
கலியுகத்தில் உன் குடிலை நோக்கிவந்து சேர்ந்து
5. சேர்ந்துமே அவரவர்கள் சிறப்பான சேவை நேர்ந்து உன் நோக்கம் வெற்றிகொள்ள
நிலவுலகில் தொண்டர்களாக இணைந்து ஆற்றி
ஆற்றியே உலகமெங்கும் அற்புதத்தை அரங்கனின் நாமஜெபமாக மாற்றி
வரங்கள் என்வழிப் பெற்று அவரவரும்
6. வல்லமைபட அரங்கன் உன் நோக்கத்தை பூர்த்திசெய்வர்
ஆதலால் அரங்கன் நீ தொடர்ந்து செய்யும் தவமும்
ஆற்றல்பட அரங்கன் நீ செய்துவரும் தர்மமும்
மாற்றத்தை உலகில் நடத்தக்கூடும்

7. மகான் சுப்ரமணியப்பெருமான் என்னருளாலே இந்த அற்புதம் நிகழும்
நிகழவே உலகமெங்கும் நின் நாமஜெபம் கூறிவரும் தொண்டர்கள்
வகைபட ஒன்றிணைந்து வல்லமையான ஒரு கூட்டமைப்பை
வடிவேலன் என் தயவோடு நடத்தி அற்புதம் படைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–